# <u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

<u>ந.க.எண் : 3908/ 2010 / எம்சி. 8 நாள் : 21 .4.2010</u>

<u>அய்யா /அம்மா,</u>

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 23.4.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்
## ஏப்ரல் 2010
## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – மேட்டுப்பாளையம் சாலை மலர் அங்காடி முதல் கவுண்டம்பாளையம் வரை சாலை மையத் தடுப்புச்சுவர் கட்டுதல் பணி – விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **2** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – வார்டு எண் 16 ரங்கவிலாஸ் திட்ட சாலை அவினாசி சாலை முதல் அண்ணா நகர் வரை தடுப்புச்சுவர் கட்டுதல் பணி – ஒப்பந்தப் புள்ளி கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **3** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு –அவினாசி சாலையிலிருந்து கொடீசியா அரங்கத்திற்கு செல்லும் திட்டச்சாலையை தானமாக பெறுதல் – சாலைக்கு பி.எஸ்ஜி. கங்கா நாயுடு சாலை என பெயர் வைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **4** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – அவினாசி சாலையின் இருபுறமும் நடைபாதை மற்றும் சாலையோர பூங்கா அமைத்தல் பணி- விருப்ப கேட்பு அறிக்கை கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **5** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – திருச்சி சாலையின் இருபுறமும் நடைபாதை மற்றும் சாலையோர பூங்கா அமைத்தல் பணி- விருப்ப கேட்பு அறிக்கை கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **6** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – திருச்சி சாலை சங்கனூர் பள்ளத்திலிருந்து அரசு மருத்துவமனை வரை -சாலை மையத் தடுப்புச்சுவர் கட்டுதல் பணி - விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **7** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – திருச்சி சாலை பங்குவர்த்தனை மையம் முதல் ஒண்டிப்புதூர் மேம்பாலம் வரை சாலை மையத் தடுப்புச்சுவர் கட்டுதல் பணி – விருப்ப கேட்பு அறிக்கை கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **8** | பொறியியல் பிரிவு - உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி - ஒப்பந்தப் புள்ளி கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **9** | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **10** | நகரமைப்பு பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 16 – ரங்கவிலாஸ் மில் இணைப்பு சாலை – நில ஆர்ஜிதத் தொகை வழங்குவது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| **11** | நகரமைப்புப் பிரிவு -உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பேருந்து நிறுத்தும் இடங்களில் தனியார் பங்களிப்புடன் பயணிகள் நிழற்குடைகள் அமைத்து 3 ஆண்டுகளுக்கு பராமரித்தல் - மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி புதுப்பித்தல் - திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு ஐந்து சிப்பங்களுக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கோரியது - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் -தொடர்பாக. |
| **12** | மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் - மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 25.03.2010 தேதியில் நடைபெற்றது – ஏலக் கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| **13** | **Jnnurm** –பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் – சிவானந்தா மில்ஸ் – விளாங்குறிச்சி சாலை– குடிநீர் குழாய் பதித்தல் - சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்துதல் - ரூ. 21.87 இலட்சம் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |

நன்றியுரை

அ) திருக்குறள்

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.

(குறள் 266)

விளக்கம்

அடக்கமும், அன்பு நெறியும், துன்பங்களைத் தாங்கும் பொறுமையும் வாய்ந்த தவம் மேற்கொண்டவர்கள் மட்டுமே தனது கடமையைச் செய்பவர்கள். அதற்கு மாறானவர்கள் ஆசையால் அலைக்கழிக்கப்பட்டு வீணான செயல்களில் ஈடுபடுபவர்கள்.

திருவள்ளுவர்.

---

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

**பொருள் : உலகத் தமிழ் செம்மொழி மாநாடு – 2010 - கோவை மாநகராட்சி மேட்டுப்பாளையம் சாலையில் மலர் அங்காடி முதல் கவுண்டம் பாளையம் வரை சாலை சந்திப்பு மேம்படுத்துதல், தேவையான இடங்களில் மழைநீர் வடிகால் அமைத்தல், சாலையின் இரு புறமும் நடைபாதை அமைத்தல், மையத்தடுப்புச்சுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்தல் மற்றும் மையத் தெரு விளக்குகள் அமைத்தல்- ஆறு ஆண்டுகள் பராமரித்தல் திரும்ப ஒப்படைத்தல் (முதலில் மூன்று ஆண்டுகளும் தேவையெனில் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும், ஆக ஆறு ஆண்டுகளுக்கு ) விருப்பு கேட்பு அறிக்கை ( Expression of Interest) கோரி பணி மேற்கொள்ளுதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.**

*****

**கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் 2010 –ல் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதால் மாநகரில் உள்ள பிரதான சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு மேட்டுப்பாளையம் சாலையில் மலர் அங்காடி முதல் கவுண்டம்பாளையம் வரை நடைபாதை அமைத்தல், சாலை சந்திப்பு மேம்படுத்துதல், தேவையான இடங்களில் மழைநீர் வடிகால் அமைத்தல், மையத்தடுப்புச் சுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்தல், மையத் தெருவிளக்குகள் அமைத்து தனியார் பங்களிப்புடன் அமைத்து அதனை மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் பராமரிக்கவும் தேவைப்பட்டால் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிக்கவும் (ஆக 6 ஆண்டுகள்) தனியார் நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ள விருப்புக் கேட்பு அறிக்கை (Expression of Interest) தயாரிக்கப்பட்டுள்ளது.**

**எனவே மேற்கண்ட பணிகளுக்கு தனியார் பங்களிப்புடன் அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு மாநகராட்சியால் விருப்புக் கேட்பு அறிக்கை (Expression of Interest) கோரி பணி மேற்கொள்ள இப்பணியை தனியார் நிறுவனங்கள் மூலம் மாநகராட்சியில் வடிவமைத்து குறிப்பிடும் அளவீடுகளுக்கு விளம்பரங்கள் (தமிழ்நாடு அரசு உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் உரிமம் சட்டம்) (Tamilnadu Urban Local Bodies Licensing of Hoarding and Levy and Collection of Advertisement Tax Rules Act 2003) தெரிவித்துள்ளவாறு செய்து கொள்ளவும் மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் உரிமையும், தேவையெனில் மேலும் 3 ஆண்டுகளுக்கு ( ஆக மொத்த் 6 ஆண்டுகளுக்கு) விளம்பர உரிமம் நீட்டிப்பு வழங்கப்படும் என்ற நிபந்தனை பேரில் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி பெற பொருள் வைக்கப்படுகிறது. மேலும் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற மிக குறைந்த காலமே உள்ளதால் குறுகியகால விருப்புக் கேட்பு அறிக்கை (EOI) கேட்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 2843/10/D1W**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.14 நாள். 23.4.2010</u>**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 19-04-2010 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணி ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பணி

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **2984/2010** (எம்.டி.2) எம்.டி.3 | வார்டு எண்.16–ல் ரங்கவிலாஸ் திட்ட சாலையில் அவினாசி சாலை முதல் அண்ணாநகர் வரை தடுப்புச் சுவர் கட்டுதல் | 75.00 | 16-04-2010 முதல் அழைப்பு | திரு.மயில்வாணன் | 0.26% குறைவு |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்ற கூட்டத்தாள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம்.** **ந.க.எண் 2984/2010(எம்.டி.2) எம்.டி.3**

**மாநகர மன்ற தீர்மானம் எண்.15 நாள்.23.4.2010**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 3**

பொருள்:- உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு – 2010 - மாநாடு நடைபெறும் கொடிசியா அரங்கத்திற்கு அவினாசி சாலையிலிருந்து செல்லும் திட்டச்சாலை(அணுகுசாலை)60அடி சாலையாக மாற்ற நடவடிக்கை - தனியார் நிலம்தானமாக அளித்தல்- சாலைக்குப் பெயர் வைத்தல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை(3டி) எண்:11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:- 07-04-2010
2. மாமன்றத் தீர்மான எண்:-1 நாள்-16-04-2010
3. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்:-33-2009,உ.த.செ.மா. நாள்:-12-04-2010

*****

கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும் பகுதியான கொடிசியா அரங்கத்திற்கு அவினாசி சாலையிலிருந்து செல்லும் திட்ட சாலையை (அணுகுசாலை) 60’அடி சாலையாக அமைப்பதற்கு நிர்வாக அனுமதியும் நிதி ஒப்புளிப்பும் வழங்கி பார்வை(1)ல் **கண்டுள்ள அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்** தொடர்ச்சியாக பார்வை (2)ல் கண்டுள்ள மாமன்றத்தின் தீர்மான எண்:-1 நாள்:-16-04-2010ன்படி அப்பணிகளுக்கு தேவைப்படும் நிலத்தை சம்மந்தப்பட்ட நில உரிமையாளர்களிடமிருந்து மாநகராட்சியின் பெயருக்கு கிரைய பதிவு பெற்று தரம் உயர்த்தவும் 60’அடி திட்டச் சாலையை ‘2’வழிப் பாதையாக (13.50 மீட்டர்அகலம்) அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.159.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்பள்ளி கோரவும்,ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டில் இச்சாலையில் தெரு மின் விளக்குகள் மற்றும் உயர்மட்ட கோபர விளக்குகள் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்பொழுது பார்வை (3)ல் கண்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் மாநாடு நடைப்பெறும் கொடிசியா அரங்கத்திற்கு அவினாசி சாலையிலிருந்து செல்லும் திட்டச்சாலை (அணுகு சாலை) 60’அடி சாலையாக மாற்றுவதற்கு தேவைப்படும் பி.எஸ்.ஜி. கங்கா நாயுடு அண்டு சன்ஸ் அறக்கட்டளை நிலத்தை அதன் நிர்வாக அறங்காவலர் திரு.ஜி.ஆர்.கார்த்திகேயன் மாநகராட்சிக்கு தானமாக வழங்கிட இசைவு தெரிவித்துள்ளார் எனவும் மேற்படி சாலையின் பெரும்பகுதி தங்களது அறநிலையம் தானமாக கொடுக்கவிருக்கும் நிலத்தில் அமைக்கப்பட விருப்பதால் இந்த சாலைக்கு அதன் அறக்கட்டளை நிறுவனர் அமரர் பி.எஸ்.ஜி. கங்கா நாயுடு அவர்களின் பெயர் சூட்டப்படவேண்டும் என்று கோரியுள்ளார். எனவே இது தொடர்பாக மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானம் பெற்று அனுப்பிவைக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே மேற்கண்டுள்ள இச்சாலைக்கு தேவைப்படும் நிலத்தினை தானமாக கோவை மாநகராட்சியின் பெயருக்கு இந்த அறக்கட்டளை கிரையம் செய்து கொடுத்தபின்னர் சாலைக்கு இந்த அறக்கட்டளையின் நிறுவனர் அமரர் பி.எஸ்.ஜி.கங்கா நாயுடு அவர்களின் பெயர் சூட்டுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்:**3537/2010/MD3**

**மாநகர மன்ற தீர்மானம் எண்.16 நாள். 23.4.2010**

**அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 4

பொருள் : உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு- கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட அவினாசி சாலையின் இருபுறமும் 3.00 மீட்டர் அகலத்திற்க்கு மேற்பட்ட சாலை ஓரங்களில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை தனியார் பங்களிப்புடன் அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், தேவைப்படும் பட்சத்தில் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்தல் - திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு இரண்டு சிப்பங்களுக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கோரியது – மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

பார்வை : மாமன்ற தீர்மான எண் 275 நாள் 12-03-2010.

பார்வையில் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தில் அவினாசி சாலையில் இருபுறமும் சாலை ஓரங்களில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் பணிக்கு 5 சிப்பங்களில் மூன்று சிப்பங்களுக்கு (சிப்பம் I, II & V) பணியை ஒப்படை செய்யவும் இரண்டு சிப்பங்களுக்கு (சிப்பம் III & IV) குறுகிய கால மறு விருப்ப கேட்பு அறிக்கை கோரவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து இரண்டு சிப்பங்களுக்கு (சிப்பம் III & IV) 22-03-2010-ல் விருப்ப கேட்பு அறிக்கை கோரியதில் கீழ்கண்டவாறு விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டது.

| நிறுவனத்தின் பெயர் | அவினாசி சாலை வடக்கு GKNM முதல் லட்சுமி மில் வரை<br><br>சிப்பம்III<br>ஒரு வருடத்திற்கு | அவினாசி சாலை வடக்கு திருப்பூர் டெக்ஸ்டைஸ் பாலம் முதல் PKD நகர் வரை<br><br>சிப்பம்IV<br>ஒரு வருடத்திற்கு |
|---|---|---|
| 1) தி/ள் பிரகாஷ் ஆர்ட்ஸ், சென்னை | ரூ 5,04,000/- | ரூ 6,30,000/- |
| 2) தி/ள் மெட்ரோ மல்டிமீடியா பிரைவேட் லிட், சென்னை | ரூ 4,50,000/- | ரூ 6,30,000/- |

பெறப்பட்ட இரண்டு விருப்ப கேட்பு அறிக்கைகளில் தி/ள் பிரகாஷ் ஆர்ட்ஸ், சென்னை நிறுவனத்தார் சிப்பம்-III-க்கு உயர்ந்தபட்ச தொகையாகவும், சிப்பம்-IV-க்கு தி/ள் பிரகாஷ் ஆர்ட்ஸ், சென்னை மற்றும் தி/ள் மெட்ரோ மல்டிமிடியா பிரைவேட் லிட், சென்னை ஆகிய இரு நிறுவனங்களும் ஒரே தொகை குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி விருப்ப கேட்பு அறிக்கைகளுக்கு நிறுவனத்தாரை முடிவு செய்யும்பொருட்டு இரு நிறுவனத்தார்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தி/ள்பிரகாஷ் ஆர்ட்ஸ், சென்னை நிறுவனத்தார் தமது 08-04-2010-ம் தேதிய கடிதத்தில் சிப்பம்-IV-ஐ ஏற்றுக்கொள்வதாகவும், சிப்பம்-III-ஐ ஒப்படை செய்வதாகவும் தெரிவித்துள்ளார். தி/ள்மெட்ரோ மல்டிமிடியா பிரைவேட் லிட், சென்னை நிறுவனத்தார் தமது 08-04-2010-ம் தேதிய கடிதத்தில் சிப்பம் IV-ஐ ஒப்படை செய்வதாகவும், சிப்பம் III -க்கு உயர்ந்த பட்ச தொகையாக ரூ5,04,000/-க்கு ஏற்று கொள்வதாகவும் சம்மத கடிதம் அளித்துள்ளனர்.

எனவே, மேற்படி சிப்பம் III-க்கு உயர்ந்த பட்ச தொகையாக ரூ5,04,000/- கொடுத்துள்ள தி/ள்மெட்ரோ மல்டிமிடியா பிரைவேட் லிட், சென்னை நிறுவனத்தாருக்கும் சிப்பம் IV-க்கு உயர்ந்த பட்ச தொகையாக ரூ 6,30,000/- ம் கொடுத்துள்ள தி/ள்பிரகாஷ் ஆர்ட்ஸ், சென்னை நிறுவனத்தாருக்கும் ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003-ல் குறிப்பிட்டுளவாறு மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் செய்து கொள்ளவும், மூன்று ஆண்டு முடிவிற்கு பின் மேலும், மூன்று ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்குவது குறித்து மாநகராட்சியால் பரிசீலனை செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின் பேரில் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 15293/2009/(MD2) MD3

## மாநகர மன்ற தீர்மானம் எண்17 நாள். 23.4.2010

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள் : உலகத்தமிழச் செம்மொழி மாநாடு - கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட திருச்சி சாலையின் இருபுறமும் 3.00 மீட்டர் அகலத்திற்கு மேற்பட்ட சாலை ஓரங்களில் நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்களை தனியார் பங்களிப்புடன் அமைத்தல் மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) மூன்று சிப்பங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்தல் - தொடர்பாக

கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற இருப்பதால் திருச்சி சாலையில் நடைபாதை அமைக்கவும் மற்றும் சாலையோர பூங்காக்கள் தனியார் பங்களிப்புடன் அமைக்கவும் மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல் திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு விருப்பு கேட்பு அறிக்கை கோர வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

சாலையின் இருபுறமும் தடுப்பு சுவர், நடைபாதை மற்றும் சாலையோர பூங்காக்கள் அமைத்தல் பணிக்கு 19.04.2010ல் விருப்பு கேட்பு அறிக்கை கோரியதில் கீழ்கண்டவாறு விருப்பு கேட்பு அறிக்கை பெறப்பட்டது.

| நிறுவனத்தின் பெயர் | திருச்சி சாலை தெற்கு 1.C.S.I. Chursh லிருந்து VCR லே-அவுட் வரை 2.நெடுஞ் சாலை துறை அலுவலக சாலையில் இருந்து ஆயுர்வேத பார்மஸி வரை 3.ரிச்மண்ட் மருத்துவம னையிலில் இந்து பாரதிதாசன் நகர் வரை 4.தமிழ்நாடு போக்கு வரத்து துறை அலுவலகத் திலிருந்து வாலாங் குளம் வரை சிப்பம் I ஒரு வருடத்திற்கு | திருச்சி சாலை வடக்கு 1.ஸ்டேன்ஸ் மோட்டார் நிறுவனத்தில் இருந்து ஸ்டேன்ஸ் டெலி சர்வீஸ் வரை 2.ஏர் இந்தியா சாலையில் இருந்து ஸ்டேன்ஸ் Convensional Centre வரை 3.சாவுத்திரி சண்முகம் சாலையில் இருந்து மயானம் வரை சிப்பம் II ஒரு வருடத்திற்கு | திருச்சி சாலை வடக்கு 1.சங்கனூர் பள்ளத்தில் இருந்து மேல்புறம் நீர்மணிய காரர் வீதி வரை 2.திருச்சி சாலை தெற்கு சங்கனூர் பள்ளத்தில் இருந்து மேல்புறம் மாரியம்மன் கோவில் வீதி வரை சிப்பம் III ஒரு வருடத்திற்கு | திருச்சி சாலை வடக்கு 1.சங்கனூர் பாலத்தில் இருந்து கிழக்காக ஜெயலட்சுமி மில் வரை சிப்பம் IV ஒரு வருடத்திற்கு | திருச்சி சாலை வடக்கு 1. ஜெயலட்சுமி மில்லில் இருந்து கக்கன் நகர் வரை 2.ஸ்ரீராம் மருத்துவ முனையில் இருந்து தியாக ராயா மில் வரை சிப்பம் V ஒரு வருடத்திற்கு | திருச்சி சாலை தெற்கு 1.சங்கனூர் பாலத்தில் இருந்து கிழக்காக ஜெய லட்சுமி மில் வரை சிப்பம் VI ஒரு வருடத்திற்கு | திருச்சி சாலை தெற்கு கிழக்கு மண்டல அலுவல கத்தில் இருந்து கிழக்காக ஒண்டிப் புதூர் பாலம் வரை சிப்பம் VII ஒரு வருடத்திற்கு |
|---|---|---|---|---|---|---|---|
| 1) தி/ள், ஆா.கே.மீடியா, சென்னை | ரூ.6,02,100/-- | ரூ.3,64,500/- | ரூ.10,88,550/-- | ரூ.1/- | ரூ.1/- | ரூ.1/- | ரூ.1/- |

பெறப்பட்ட விருப்ப கேட்பு அறிக்கையில் ஆர்.கே.மீடியா, சென்னை நிறுவனத்தார் சிப்பம் I, II, III, ஆகிய மூன்று சிப்பங்களுக்கு அதிகபட்ச தொகையாக முறையே ரூ.6,02,100/-, ரூ.3,64,500/-, ரூ.10,88,550/- கோரியுள்ளார். மீதமுள்ள IV, V, VI மற்றும் VII ஆகிய சிப்பங்கள் ஒவ்வொன்றிற்கும் அதிகபட்ச தொகையாக ரூ.1 யை கோரியுள்ளார்.

எனவே சிப்பம் I, II, III, IV, V, VI மற்றும் VII ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள மூன்று சிப்பப்பணிகளை முதற்கட்ட நடவடிக்கையாக அதிகபட்ச தொகை கோரியுள்ள தி/ள். ஆர்.கே.மீடியா, சென்னை நிறுவனத்தாருக்கு முறையே ரூ.6,02,100/-, ரூ.3,64,500/-, ரூ.10,88,550/- வீதம் ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பரப்பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003ல் குறிக்கப்பட்டுள்ளவாறு மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் செய்து கொள்ளவும் மூன்று ஆண்டு முடிவிற்கு பின் மேலும் காலநீட்டிப்பு வழங்குவது குறித்து மாநகராட்சியால் பரிசீலனை செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின் பேரில் வழங்கலாம். மீதமுள்ள நான்கு சிப்பங்களான IV, V, VI மற்றும் VII ஆகியவற்றிக்கு குறைந்த தொகைக்கு கோரியுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறுகிய கால அடிப்படையில் மறு விருப்ப கேட்பு அறிக்கை கோரலாம்.

எனவே கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற இருப்பதால பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு சிப்பம் I, II மற்றும் III ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள மூன்று சிப்பப்பணிகளை முதற்கட்ட நடவடிக்கையாக அதிகபட்ச தொகை கோரியுள்ள தி/ள். ஆர்.கே.மீடியா, சென்னை நிறுவனத்தாருக்கு முறையே ரூ.6,02,100/-, ரூ.3,64,500/-, ரூ.10,88,550/- வீதம் ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பரப்பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003ல் குறிக்கப்பட்டுள்ளவாறு மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் செய்து கொள்ளவும் மூன்று ஆண்டு முடிவிற்கு பின் மேலும் காலநீட்டிப்பு வழங்குவது குறித்து மாநகராட்சியால் பரிசீலனை செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின் பேரில் வழங்கவும், மீதமுள்ள நான்கு சிப்பங்களான IV, V, VI மற்றும் VII ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு குறுகிய கால அடிப்படையில் மறு விருப்ப கேட்பு அறிக்கை கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டியும், 19.04.2010 ல் விருப்ப கேட்பு அறிக்கை கோரப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டியும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 3360/2008/MD3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.18 நாள். 23.4.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் : உலகத் தமிழ் செம்மொழி மாநாடு – 2010 - கோவை மாநகராட்சி திருச்சிசாலையில் சங்கனூர் பாலத்திலிருந்து அரசு மருத்துவமனை வரை மையத்தடுப்புச்சுவர் கட்டி அலங்கார பூங்கா அமைத்தல் மற்றும் மையத் தெருவிளக்குகள் அமைத்தல்- ஆறு ஆண்டுகள் பராமரித்துதிரும்ப ஒப்படைத்தல் (முதலில் மூன்று ஆண்டுகளும் தேவையெனில் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யவும், ஆக ஆறு ஆண்டுகளுக்கு) குறுகிய கால விருப்பு கேட்பு அறிக்கை (Expression of interest) கோரி பணி மேற்கொள்ளுதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

*****

கோயம்புத்தூரில் வரும் ஜுன் மாதம் 2010 –ல் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதால் மாநகரில் உள்ள பிரதான சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு திருச்சி சாலையில் சங்கனூர் பாலத்திலிருந்து அரசு மருத்துவமனை வரை மையத்தடுப்புச்சுவர் கட்டி, அலங்கார பூங்கா மற்றும் மையத் தெருவிளக்குகள் தனியார் பங்களிப்புடன் அமைத்து அதனை மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் பராமரிக்கவும் தேவைப்பட்டால் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிக்கவும், (ஆக ஆறு ஆண்டுகள்) தனியார் நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ள விருப்புக் கேட்பு அறிக்கை (Expression of Interest) தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகளுக்கு தனியார் பங்களிப்புடன் அமைத்து மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்தல், திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு மாநகராட்சியால் விருப்புக் கேட்பு அறிக்கை (Expression of Interest) கோரி பணி மேற்கொள்ள இப்பணியை தனியார் நிறுவனங்கள் மூலம் மாநகராட்சியில் வடிவமைத்து குறிப்பிடும் அளவீடுகளுக்கு விளம்பரங்கள் (தமிழ்நாடு அரசு உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் உரிமம் சட்டம்) (Tamilnadu Urban Local Bodies Licensing of Hoarding and Levy and Collection of Advertisement Tax Rules Act 2003) தெரிவித்துள்ளவாறு செய்து கொள்ளவும் மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் உரிமையும், தேவையெனில் மேலும் 3 ஆண்டுகளுக்கு விளம்பர உரிமம் நீட்டிப்பு வழங்கப்படும் என்ற நிபந்தனை பேரில் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி பெற பொருள் வைக்கப்படுகிறது. மேலும் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற மிக குறைந்த காலமே உள்ளதால் குறுகியகால விருப்புக் கேட்பு அறிக்கை (EOI) கேட்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 4427/2010/MD3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.19 நாள். 23.4.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள்: உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு-2010- கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட திருச்சி சாலையில் மைய தடுப்பு சுவர்களை தனியார் பங்களிப்புடன் கட்டி அதில் அலங்கார **பூங்கா அமைத்து ஆறு ஆண்டுகள் (முதலில் மூன்று ஆண்டுகளுக்கும், மேலும் மூன்று ஆண்டுகளுக்கு முறைப்படி நீட்டிப்பு செய்து திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு** குறுகிய கால விருப்புகேட்பு அறிக்கை(**Expression of Interest**) கோரி பணி மேற்கொள்ளுதல் - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக

பார்வை: 1. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு சிறப்பு அலுவலர் கூட்ட நடவடிக்கை நாள்: 14-11-2009 கடித எண்:- 3/**2009** நாள்:-23-11-2009
2. ஆணையாளரின் உத்தரவு நாள்:- 19-04-2010

*****

கோயம்புத்துரில் வரும் **ஜீன்** மாதம் 2010-ல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற உள்ளதால் மாநகரில் உள்ள பிரதான சாலைகளை மேம்படுத்துதல், நடைப்பாதை அமைத்தல் சாலையோர **பூங்கா அமைத்தல் சாலை மைய தடுப்புசுவர்** கட்டி அலங்கார **பூங்கா அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்படி உலகத் தமிழ்ச்** செம்மொழி மாநாட்டிற்க்கான தனி அலுவலர் அவர்கள் கடந்த 14-11-2009 அன்று நடத்திய கலந்தாய்வுத் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மாநகராட்சிக்கு சொந்தமான சாலைகளில் உள்ள சாலை தடுப்பு சுவர்களை தனியார் பங்களிப்புடன் புதுப்பித்து கட்டி அதில் அலங்கார **பூங்கா அமைத்து** மூன்று ஆண்டுகளுக்கு பராமரித்து திரும்ப ஒப்படைத்தல் பணிகளுக்கு மாநகராட்சியால் விருப்பு கேட்பு அறிக்கை (**Expression of Interest**) கோரி பணி மேற்கொள்ளலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி திருச்சி சாலையில் ஒண்டிப்புதூர் மேம்பாலம் முதல பங்கு பரிவர்த்தனை மையம் வரை சாலை மைய தடுப்பு சுவர் கட்டி அலங்கார **பூங்கா அமைத்து தனியார்** பங்களிப்புடன் அமைத்து **ஆறு ஆண்டுகள் (முதலில் மூன்று ஆண்டுகளுக்கும், மேலும் மூன்று ஆண்டுகளுக்கு முறைப்படி நீட்டிப்பு செய்து திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு** இரண்டு சிப்பங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சிப்பம்:-**I**

ஒண்டிப்புதூர் மேம்பாலம் முதல் காமராஜர் சாலை வரை
(சிங்காநல்லூர் பேருந்து நிலையம் வரை)

சிப்பம்:-**II**

காமராஜர் சாலை முதல் பங்கு பரிவர்த்தனை மையம் வரை

மேற்கூறிய இரண்டு சிப்பங்களின்படி பணிகளை முடித்து அவற்றினை மூன்று ஆண்டுகளுக்கு விளம்பர உரிமத்துடன் கொடுத்து அவற்றினை பராமரிக்க தனியார் நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ள குறுகிய கால விருப்பு கேட்பு அறிக்கை(**Expression of Interest**) கோரலாம்.

இப்பணியினை தனியார் நிறுவனங்களின் மூலம் மாநகராட்சியில் வடிவமைத்து குறிப்பிடும் **அளவீடுகளுக்கு** விளம்பரங்கள்(தமிழ்நாடு அரசு உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் (**Tamilnadu urban local bodies licensing of hoardings and levy and collection of advertisement tax rules act 2003**) தெரிவித்துள்ளவாறு செய்து கொள்ளவும் மூன்று ஆண்டுகளுக்கு விளம்பரம் உரிமையும், **மேலும் மூன்று ஆண்டுகளுக்கு** உரிமம் நீட்டிப்பும் வழங்கப்படும் என்ற நிபந்தனையின் பேரில் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்:- 4339/2010/ எம்.டி.3

## மாநகர மன்ற தீர்மானம் எண்.20 நாள். 23.4.2010

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய உத்தேச செலவினம் ரூ 75.00 இலட்சத்திற்கு மாமன்றம் தனது தீர்மான எண்.149 நாள் 29-12-2009 அன்று நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இப்பணிக்கு கடந்த 15-02-2010 அன்று முதல் அழைப்பாக மின்னனு முறையில் (e-tender) ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.கே.எஸ்.ராமலிங்கம், கோவை, திரு.ஜி.அகிலரசு, கோவை மற்றும் திருமதி.ஜி. மயிலாத்தாள் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளி அளித்து இருந்தனர். இவர்கள் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளிகளை திறனாய்வுக்குழு பரிசீலிக்கப்பட்டதில் மேற்படி நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு மறு ஒப்பந்தப்புள்ளி கோர சமர்ப்பிக்கப்பட்டதில், ஆணையாளர் அவர்கள் 12-03-2010-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்புதல் வழங்கியுள்ளார்.

அதன்பேரில், இரண்டாம் அழைப்பாக 01-04-2010 அன்று மின்னனு முறையில் (e-tender) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் திரு.ஜி.செந்தில்குமார், கோவை, திரு.கே.எஸ்.ராமலிங்கம், கோவை, ஜி.அகிலரசு, கோவை மற்றும் திரு.ஜி.சசிக்குமார், கோவை ஆகியோர் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | | 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு | எண்ணிக்கை | நடை ஒன்றிற்கு |
| 1 | திரு.ஜி.செந்தில்குமார், கோவை | 9 | 586 | 2 | 385 |
| 2 | திரு.கே.எஸ்.ராம-லிங்கம், கோவை | 10 | 591 | 5 | 391 |
| 3 | திரு.ஜி.அகிலரசு, கோவை | 6 | 602 | ஒப்பந்தப்புள்ளி அளிக்கவில்லை | |
| 4 | திரு.ஜி.சசிக்குமார், கோவை | 3 | 620 | ஒப்பந்தப்புள்ளி அளிக்கவில்லை | |

மேற்படி, ஒப்பந்தப்புள்ளிகளின் தகுதிகாண் கூறுகள் (Qualification Criteria) திறனாய்வு செய்ததில் திரு.ஜி.செந்தில்குமார், கோவை, திரு.கே.எஸ்.ராமலிங்கம், கோவை மற்றும் ஜி.அகிலரசு, கோவை ஆகியோர் தேர்வு பெற்றுள்ளனர். திரு.ஜி.சசிக்குமார், கோவை அவர்கள் ஒரு லாரிக்கான குத்தகை ஒப்பந்தப்பத்திரம் தாக்கல் செய்யாத காரணத்தால், இவரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.

மேற்படி, மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.ஜி.செந்தில்குமார், கோவை அவர்கள் 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் 9 எண்ணிக்கைகள், 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் 2 எண்ணிக்கைகள் ஆக மொத்தம் 11 எண்ணிக்கைகள் கொண்ட லாரிகளை அளிப்பதாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். தற்பொழுது மாநகராட்சிக்கு 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் 10 எண்ணிக்கைகளும், 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் 4 எண்ணிக்கைகளும் தேவைப்படுகிறது. எனவே, பற்றாக்குறையாக உள்ள 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி 1 எண்ணிக்கையும் மற்றும் 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் 2 எண்ணிக்கைளும் தேவைப்படுவதாலும், ஒப்பந்தப்புள்ளியில் முதலாவதாக குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஜி.செந்தில்குமார், கோவை அவர்களை பற்றாக்குறையாக உள்ள லாரிகளின் தேவைகளை பூர்த்தி செய்யவும், விலைக்குறைப்பு செய்யவும் கடிதம் வைக்கப்பட்டதனை தொடர்ந்து திரு.ஜி.செந்தில்குமார், கோவை அவர்கள் தனது 10-04-2010-ம் தேதிய கடிதத்தில் கீழ்கண்டவாறு விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளார். மேலும், பற்றாக்குறையாக உள்ள லாரிகளை பூர்த்தி செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | | விலைக்குறைப்பிற்கு பின் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| | | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு |
| 1 | திரு.ஜி.செந்தில் குமார் | 586 | 385 | 581 | 380 |

இதன் தொடர்ச்சியாக பற்றாக்குறையாக உள்ள லாரிகளை பூர்த்தி செய்யவும், கோடை காலத்தில் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்கவும் வரும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிற்கான குடிநீர் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் இரண்டாவது குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.எஸ். இராமலிங்கம், கோவை அவர்களிடம் திரு.ஜி.செந்தில்குமார், கோவை அவர்களின் விலைக்கே குறைத்து கொடுக்க கோரவும், ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதை ஆணையர் அவர்கள் 12-04-2010 அன்று ஒப்புதல் அளித்துள்ளார். அதன்பேரில், திரு.கே.எஸ்.ராமலிங்கம் அவர்களிடம் திரு.ஜி.செந்தில்குமார் அவர்களின் விலைக்கே குறைத்து கொடுக்க கடிதம் கோரப்பட்டது. அதனை தொடர்ந்து திரு.கே.எஸ். ராமலிங்கம், கோவை அவர்கள் தனது 12-04-2010-ம் தேதிய கடிதத்தில் திரு.ஜி.செந்தில்குமார், கோவை அவர்களின் விலைப்புள்ளிக்கே தனது விலைப்புள்ளியை (கீழ்கண்ட பட்டியல்படி) குறைத்து கொடுத்துள்ளார்.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஓப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | | விலைக்குறைப்பிற்கு பின் குறிப்பிட்டுள்ள தொகை (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|
| | | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு | 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு | 3500லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரி நடை ஒன்றிற்கு |
| 1 | திரு.கே.எஸ். ராமலிங்கம் | 591 | 391 | 581 | 380 |

எனவே, மேற்படி பணிக்கு திரு.ஜி.செந்தில்குமார், கோவை மற்றும் திரு.கே.எஸ். ராமலிங்கம், கோவை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையான (விலைக்குறைப்பிற்கு பிறகு) 9000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிக்கு நடை ஒன்றிற்கு ரூ581/-ம், 3500 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிக்கு நடை ஒன்றிற்கு ரூ. 380/-ம் ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.247 / 2010 / எம்.டி.

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.21 நாள்.23.4.2010</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## <u>பொருள் எண் 9</u>

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழக்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு 09-04-2010 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 9728/2009 (எம்.டி.2) எம்.டி.3 | வார்டு எண்: 7 சி.எம்.சி. காலனியில் பொது கழிப்பிடம் கட்டுதல் | 7.00 | 06-04-2010 நான்காவது அழைப்பு | திரு.டி.ராஜு | 4.88% அதிகம் |
| 2 | 9770/2009 (எம்.டி.2) எம்.டி.3 | வார்டு எண்:14 உடையாம் பாளையம் ராஜிவ்காந்தி நகரில் பொது கழிப்பிடம் கட்டுதல் | 8.00 | 06-04-2010 நான்காவது அழைப்பு | திரு.டி.ராஜு | 4.69% அதிகம் |
| 3 | 12788/2009 (எம்.டி.2) எம்.டி.3 | வார்டு எண்:15 சவுரிபாளையத்தில் உள்ள மயானத்தில் தியான மண்டபம் கட்டுதல் | 7.30 | 06-04-2010 நான்காவது அழைப்பு | திரு.டி.ராஜு | 4.84% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | **9729**/09/ (எம்.டி.2) எம்.டி.32 | வார்டு எண்:7 கள்ளிமடை பகுதிகளில் பொது கழிப்பிடம் கட்டுதல் | 7.00 | 06-04-2010 நான்காவது அழைப்பு | திரு.டி.ராஜு | **4.88%** அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பதல் பெற மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: இப்பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம் .

ந.க. எண். 9728/2009 எம்.டி.3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.22 நாள் 23.4.2010</u>

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

**பொருள் எண் 10**

**கோயம்புத்தூர் மாநகராட்சி உலக தமிழ் செம்மொழி மாநாட்டை யொட்டி கிழக்கு மண்டலம் வார்டு எண்.16 பகுதிக்குட்பட்ட ரங்கவிலாஸ் மில்ஸ் இணைப்பு சாலை அமைக்க நில உரிமையாளர்களிடமிருந்த நிலங்களை பத்திரப்பதிவு மூலம் கிரையம் பெற்று வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கடிதம் ந.க.எண். 34164/09/ஊ.3 நாள். 17.4.2010ன் மூலம் கோரப்பட்டுள்ளதில் மற்றும் இதற்கான நில ஆர்ஜிதம் மற்றும் சாலை அமைக்க தேவையான தொகை அரசு ஆணை எண்.எம்.எஸ்.65 வீட்டு வசதி மற்றும் மேம்பாடு ( யூடிடி.1 ) துறை நாள் 22.3.2010ன் மூலம் (1) ரங்கவிலாஸ் மில்ஸ் ரோடு பகுதிக்கு 6.77 கோடியும், (2) நவஇந்தியா சாலைப் பகுதிக்கு ரூ.5.80 கோடியும் (3) மசக்காளிப்பாளையம் சாலைப் பகுதிக்கு ரூ.0.68 கோடியும் ஆக மொத்தம் ரூ13.25 கோடி ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் ரங்கவிலாஸ் மில்ஸ் சாலைக்காக நில ஆர்ஜித தொகையும் அதற்கான பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரை தீர்வை கட்டணம் விபரம்.**

| வ. எண் | நில உரிமையாளர்கள் பெயர் | க.ச எண் | கிரையம் பெற உள்ள விஸ்தீரணம் | மொத்த தொகை ரூபாய் | பதிவுக் கட்டணம்(1%) முத்திரை தீர்வை கட்டணம் (8 % ) |
|---|---|---|---|---|---|
| 1 | பி. மூர்த்தி<br>காமாட்சி தேவி<br>மற்றும்<br>கன்னியம்மாள் | 475 பாகம் | 6965 ச.அடி | 38,51,645 | 3,46,648 |
| 2 | வி.மாணிக்கம்<br>வி . ராஜ்குமார்<br>வி.கிருஷ்ணமூர்த்தி<br>வி.மனோகரன்<br>வி.மோகன்<br>வி.கிருஷ்ணன் | 475 பாகம் | 5779 ச.அடி | 31,95,787 | 2,87,621 |
| 3 | வி.கிருஷ்ணன் | 475 பாகம் | 402 ச.அடி | 2,22,306 | 20,008 |
| 4 | திருமதி<br>சண்முகஷோபனா | 254-3 | 9790 ச.அடி | 54,13,870 | 4,87,248 |
| | மொத்தம் | | | 1,26,83,608 | 11,41,525 |

**ஆகியவற்றிற்கு பத்திர பதிவு கட்டணம் கோயமுத்தூர் மாநகராட்சி நிதியிலிருந்து செலுத்துவது குறித்தும் ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 12756/ 2008/ (எச். 2 வ) எம்எச். 5**

<u>**மாநகர மன்ற தீர்மானம் எண்.23 நாள். 23.4.2010**</u>

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

---

## பொருள் எண் 11

பொருள் :உலகத் தமிழ் செம்மொழி மாநாடு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பேருந்து நிறுத்தும் இடங்களில் தனியார் பங்களிப்புடன் பயணிகள் நிழற்குடைகள் அமைத்து 3 ஆண்டுகளுக்கு பராமரித்தல் - மேலும் 3 ஆண்டுகளுக்கு அனுமதி புதுப்பித்தல் - திரும்ப ஒப்படைத்தல் பணிக்கு ஐந்து சிப்பங்களுக்கு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கோரியது - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் -தொடர்பாக.

பார்வை : மாமன்ற தீர்மான எண். 94, நாள். 30.09.2009

பார்வையில் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பயணிகள் நிழற்குடைகள் அமைக்க விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கோர அனுமதி வழங்கியதன் பேரில், தனியார் பங்களிப்புடன் பழைய பயணிகள் நிழற்குடைகளை அகற்றிவிட்டு புதியதாக நவீன பயணிகள் நிழற்குடைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் பணிக்கு ஐந்து சிப்பங்களுக்கு 16.4.2010 விருப்ப கேட்பு அறிக்கை கோரியதில் கீழ்க்கண்டவாறு விருப்பு கேட்பு அறிக்கை பெறப்பட்டது.

| சிப்பம் எண் | தி/வா. சசி அட்வர்டைசிங் (பி) லிட், கோயம்புத்தூர் | தி/வா. வான்டேஜ் அட்வர்டைசிங் (பி) லிட், சென்னை | தி/வா. ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அட்வர்டைசர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் |
|---|---|---|---|
| I (மேற்கு மண்டலம்) | - | - | - |
| II (தெற்கு மண்டலம்) | ரூ. 34,92,000 | ரூ.26,02,164 | ரூ.90,00,000 |
| III (வடக்கு மண்டலம்) | ரூ. 19,92,300 | ரூ.41,04,002 | ரூ.29,63,772 |
| IV (கிழக்கு மண்டலம்) | | | |
| V (கிழக்கு மண்டலம்) | | | ரூ.13,80,000 |

பெறப்பட்ட நான்கு விருப்ப கேட்பு அறிக்கைகளில் தி/வா. பிரகாஷ் ஆர்டஸ் (பி) லிட்ஸ், சென்னை நிறுவனத்தார் ஒரு சிப்பத்திற்கு மட்டும் விருப்ப கேட்பு அறிக்கை கொடுத்துள்ளார். ஒப்பந்தப்புள்ளி விதி 6.5 ன்படி குறைந்த பட்சம் இரண்டு சிப்பங்களில் பங்கேற்க வேண்டும். மேற்படி தி/வா. பிரகாஷ் ஆர்டஸ் (பி) லிட்ஸ், சென்னை நிறுவனத்தார் ஒரு சிப்பத்திற்கு மட்டும் விருப்ப கேட்பு அறிக்கை கொடுத்துள்ளதால் இவருடைய விருப்ப கேட்பு அறிக்கை நிராகரிக்கப்பட்டது.

மீதமுள்ள மூன்று விருப்ப கேட்பு அறிக்கைகளில் சிப்பம் - II –க்கு உயர்ந்த பட்ச தொகையாக ரூ. 90,00,000/- கொடுத்துள்ள தி/வா. ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அட்வர்டைசர்ஸ் (பி) லிட் கோயம்புத்தூர் நிறுவனத்தாருக்கும், சிப்பம் - III க்கு உயர்ந்த பட்ச தொகையாக ரூ. 41,04,002/– கொடுத்துள்ள தி/வா. வான்டேஜ் அட்வர்டைசிங் (பி) லிட், சென்னை நிறுவனத்தாருக்கும், சிப்பம் - V க்கு ஒரே தொகையாக (single tender) ரூ. 13,80,000 கொடுத்துள்ள தி/வா. ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அட்வர்டைசர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் நிறுவனத்தாருக்கும் ஆண்டு குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு விளம்பர பலகைகள் உரிமம் சட்டம் மற்றும் விதிகள் 2003-ல் குறிப்பிட்டுள்ளவாறு 3 ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை அமைத்து பராமரிப்பு செய்யவும், மூன்று ஆண்டு முடிவிற்கு பின் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம். ந.க.எண். 5541/2008/எம்.எச்.5

## மாநகர மன்ற தீர்மானம் எண்.24 நாள். 23.4.2010

1.பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முதலில் மூன்று ஆண்டுகளுக்கு அனுமதிக்கவும், மேலும் மூன்று ஆண்டுகளுக்கு மாமன்ற ஒப்புதலுடன் கால நீட்டிப்பு செய்யப்படும் என்ற உத்திரவாதத்தின் பேரில் தி / வா. ஸ்ரீலட்சமி நரசிம்மர் அட்வர்டைசர்ஸ் (பி) லிட், கோம்புத்தூர் நிறுவனத்தாருக்கு சிப்பம் II மற்றும் V பணியினை ஒப்படை செய்யவும், தி/ வா. வான்டேஜ் அட்வர்டைசிங் (பி) லிட், சென்னை நிறுவனத்தாருக்கு சிப்பம் III பணியினை ஒப்படை செய்யவும் அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

2.நீட்டிப்பு காலம் முடிவுற்ற பிறகு மறுஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் 12**

பொருள்- கோவை மாநகராட்சி – மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் - மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 25.03.2010 தேதியில் நடைபெற்றது – ஏலக் கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்டது -தொடர்பாக.

----

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், குத்தகை இனங்கள் 2010-13 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைத்தல் மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 25.03.2010 தேதியில் நடைபெற்றது. அதில் கீழ்கண்ட ஏலதாரர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ளார்.

ஏலம் நடைபெற்ற நாள்.25.03.2010

மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் மேற்படி மார்க்கெட்டிற்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.

| வ. எண் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஏலதாரர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (Accept Price) | உயர்ந்த பட்ச மின் ஏலக் கேள்வி தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை | உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப் புள்ளி தொகை | கூடுதலாக கிடைக்கப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.ஜே.ஸ்டீபன் | 37,90,000 | 42,60,000 | 50,40,008 | 50,40,008 | 53% |

திரு.ஜே.ஸ்டீபன் உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளியாக 25.03.2010 அன்று ரூ.50,40,008/-க்கு கேட்டுள்ளார். இத்தொகை 2009-10 ஆண்டின் ஏலத்தொகை ரூ.32,92,793/-ஐ விட அதிகமாக உள்ளது. மற்றும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.31,48,951/-ஐ விட உயர்வாக உள்ளது.

மேற்படி மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் மேற்படி மார்க்கெட்டிற்கு வரும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை இனத்திற்கு 2009-10 ஏலத் தொகையுடன் 5 சதவீதம் கூடுதலாக நிர்ணயம் செய்து தனக்கு ஒப்படைக்க கோரி முந்தைய ஏலதாரர் திருமதி.ஜெயா என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மேல் முறையீடு மனு .No.557/2010 செய்ததன் பேரில் சென்னை உயர்நீதிமன்ற உத்திரவு எண்.W.A.No.557/2010 நாள்.23.03.2010-ல் மேற்படி இனத்தை ஏலம் நடத்தலாம், ஆனால் ஏலம் முடிவு செய்யக்கூடாது என உயர்நீதிமன்றத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் திருமதி.ஜெயா என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த ரிட் மேல் முறையீடு மனு எண்.W.A.No.557/2010-ஐ வாபஸ் பெற்றுக்கொள்வதாக 15.04.2010-ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார் மற்றும் இவ்வழக்கு 23.04.2010-ம் தேதியன்று விசாரணைக்கு வந்ததில் எதிர்மனுதாரர் வழக்கை வாபஸ் பெற்றதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக திரு.ஆர்.சிவக்குமார், கோவை மாநகராட்சியின் சென்னை வழக்கறிஞர் பேக்ஸ் மூலம் தகவல் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி கோரிய திரு.ஜே.ஸ்டீபன் என்பவருக்கு மேற்படி இனத்தை ஒப்படைப்பு செய்ய அவசர அவசியத்தை முன்னிட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெற்று மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.12496 / 08 / அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண்.25 நாள். 23.4.2010**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 13

கோவை மாநகராட்சி, தனி குடிநீர் திட்டமான பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியில், ஒரு பகுதி பணியான கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1000 முதல் 1500 எம்.எம் வரை எம்.எஸ். (MS) மற்றும் பி.எஸ்.சி. (PSC) குழாய் அமைத்தல் பணி ரூ. 57.17 கோடி செலவில் மெஸ்ஸர்ஸ் நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட், ஹைதராபாத் என்ற நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியில் நெடுஞ்சாலைத்துறை அன்னூர் உட்கோட்ட எல்லை சார்ந்த சிவானந்தா மில்ஸ் – விளாங்குறிச்சி சாலை கி.மீ. 0/0 முதல் 1/6 வரையிலும் (மண் சாலைப் பகுதி) சாலையை வெட்டி பிரதான குடிநீர் குழாய் பதிப்பதற்காக சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்த கடந்த 04.12.09–ல் மாநகராட்சியால் நெடுஞ்சாலைத்துறை அனுமதி கேட்கப்பட்டது. அதன்பேரில் உதவிக் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, அன்னூர் அவர்களிடமிருந்து மேற்படி சாலையில் குடிநீர் பிரதான குழாய் பதிக்க அனுமதியும் அச்சாலை சீரமைப்பிற்காக ரூ.3,88,500/–ஐ செலுத்தவும் கடந்த 02.02.10–ல் கேட்பு பெறப்பட்டு அதன்படி 02.03.10–ல் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் மாமன்ற தீர்மான எண் 256–ன் மூலம் மாமன்ற அனுமதி பெறப்பட்டு சாலை சீரமைப்புத் தொகையான ரூ.3,88,500/– உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, அன்னூர் அவர்களுக்கு செலுத்தப்பட்டது. சாலையின் ஓரத்தில் ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் தொலைதொடர்புத்துறை கேபிள்கள் அதிகப்படியாக உள்ளதால் தார் சாலையின் மையப்பகுதியினை ஒட்டி தோண்டப்பட வேண்டியிருந்தது. அதன் காரணமாக தார் சாலை அதிகப்படியாக சேதமடைந்ததை தொடர்ந்து திருத்திய சாலை சீரமைப்பு மதிப்பீடு கோட்டப்பொறியாளர் (நெ), கோவை அவர்களால் தயாரிக்கப்பட்டு உதவிக் கோட்டப்பொறியாளர் அவர்கள் மூலம் பெறப்பட்டுள்ளது.

திருத்திய சாலை சீரமைப்புக் கட்டணம் ரூ. 25,75,000/– எனவும் ஏற்கனவே செலுத்திய ரூ. 3,88,500/– போக மீதமுள்ள ரூ. 21,87,000/– செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளதால், நெடுஞ்சாலைத்துறைக்கு சாலை சீரமைப்புக் கட்டணமான ரூ. 21.87 இலட்சத்தினை செலுத்தவும், அதற்கான செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :– பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை அன்னூர் உட்கோட்ட எல்லை சார்ந்த சிவானந்தா மில்ஸ் – விளாங்குறிச்சி சாலையில் தார் சாலையை வெட்டி குடிநீர் குழாய் பதிப்பதனால் ஏற்படும் திருத்திய சீரமைப்புக் கட்டணம் ரூ. 21.87 இலட்சத்தினை நெடுஞ்சாலைத்துறைக்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்துவதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4614 /08 / JN5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண்.26 நாள். 23.4.2010</u>

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி